டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.08.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 048 - Madurai | Online Edition

# பிரதமரின் போஷான் திட்டத்தின் கீழ் உணவுத் தானியங்கள் ஒதுக்கீடு!

புது தில்லி, ஆக.13

பிரதமரின் போஷான் (PM POSHAN) திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குச் ஊட்டச்சத்துமிக்க உணவை வழங்குவதற்கான முழு உணவுத் தானியச் செலவு, போக்குவரத்துச் செலவு மற்றும் கண்காணிப்புச் செலவுகளுக்கான 100% நிதியுதவியை மத்திய அரசு வழங்குகிறது.

மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகங்களுடன் இணைந்து செயல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு, இந்திய உணவுக் கழகம் (FCI) மூலம் உணவுத் தானியங்கள் வழங்கப்படுகின்றன. தடையற்ற விநியோகத்தை உறுதி செய்ய, விநியோக மையங்களில் சராசரித் தரம் கொண்ட தானியங்களை மட்டுமே ஆய்வு செய்து வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும், மாநில மற்றும் மாவட்ட அளவில் விரிவான கண்காணிப்புக் குழுக்கள் மூலமும், வாராந்திர உணவுப் பட்டியல், பயன்படுத்தப்பட்ட உணவுத் தானியங்களின் அளவு மற்றும் பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை போன்ற விவரங்களைப் பொதுமக்கள் பார்வைக்குக் காட்சிப்படுத்துவதன் மூலமும் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படுகிறது.

கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உணவுத் தானியங்கள் திறம்பட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அதன்படி, தமிழ்நாட்டிற்கு 2023-24 நிதியாண்டில் 1,00,267.70 மெட்ரிக் டன், 2024-25 நிதியாண்டில் 95,341.63 மெட்ரிக் டன் மற்றும் 2025-26 நிதியாண்டில் 90,476.98 மெட்ரிக் டன் அளவு உணவுத் தானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தகவலை மத்திய கல்வித் துறை இணையமைச்சர் ஜெயந்த் சவுத்ரி மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்தார்.

# வாலாஜா விவசாயிகளின் நில உடைமை விவரங்கள் பதிவு சரிபார்த்தல் முகாம்



ராணிப்பேட்டை, ஆக.13 விவசாயிகள் அரசின் பல்வேறு திட்டப் பலன் களைப் பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள், பயிர் சாகுபடி அறிக்கை போன்ற தொடர்புடைய ஆவணங் களை ஒவ்வொரு முறையும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் வகையிலும் அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெற ஏதுவாகவும், அனைத்து விவரங்களையும் மின்னணு முறையில் சேகரித்திட தமிழ்நாட்டில் வேளாண் அடுக்குத் திட்டம் (AgriStack) செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது, விடுப்பட்ட வாலாஜா வட்டார விவசாயிகளின் பதிவு மற்றும் ஏற்கனவே பதிவு செய்த விவசாயிகளின் விடுப்பட்ட புல உட்பிரிவுகளின் விடுபாடின்றி பதிவுகள் மேற்கொள்ள வேளாண்மை – உழவர் நலத் துறை அலுவலர்கள் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் இணைந்து கிராம அளவிலான சிறப்பு முகாம் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் பதிவு செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திலகவதி தெரிவித்தார்.

எனவே இதுவரை பதிவு மேற்கொள்ளாத விவசாயிகள் மற்றும் பதிவு செய்த விவசாயிகள் தங்களின் விடுப்பட்ட புல எண் விவரம், ஆதார் எண், கைபேசி எண், நில உடைமை மற்றும் பட்டா விவரங்களுடன் சம்மந்தப்பட்ட வருவாய் கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் நடைபெறும் சிறுப்பு முகாமில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும். மேலும், மாநில மற்றும் மத்திய அரசின் திட்டங்களில் விவசாயிகள் எளிதில் பயன்பெறவும் பிரதம மந்திரி கவுரவ நிதித்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

திட்டம் (PMKISAN) தொடர்ந்து பெறவும், தேசிய அளவிலான தனித்துவ அடையாள எண் மிகவும் அவசியம். பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (PMKISAN), நில உடமை பதிவு செய்திருந்தால் மட்டுமே வழங்கப்படும். பதிவு மேற்கொள்ள இதுவே இறுதி வாய்ப்பு என்றும் இந்த சிறுப்பு முகாமில் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறுவேண்டும் எனவும் வேளாண்மை உதவி இயக்குனர் வாலாஜா தெரிவித்துள்ளார்.

கல்மேல்குப்பம் கிராமத்தில் நில உடைமை விவரங்கள் பதிவு சரிபார்க்கும் பணி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திலகவதியின் தலைமையில் நடைபெற்றது. வேளாண்மை அலுவலர் சூர்ய–மூர்த்தி, உதவி வேளாண்மை அலுவலர், ஞானசௌந்தரி, கிராம நிர்வாக அலுவலர், சிவசங்கரி, ராஜேஸ்வரி மற்றும் சஞ்சய் ஆகிய அலுவலர்கள் பதிவு சரிபார்க்கும் பணி மேற்கொண்டனர்.

# வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மரம் நடு விழா



மதுரை, ஆக.13

பசுமையான அமாவாசையை முன்னிட்டு, மரங்களின் நன்மைகள் குறித்தும் சார்பில் நாடு முழுவதும் நடைபெற்ற மாபெரும் மரக்கன்றுகள் நடும் இயக்கத்தில் வேளாண்மை அறிவியல் நிலையம், மதுரை பங்கேற்றது. நாடு முழுவதும் 50,000–க்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நடவு செய்யும் இலக்குடன் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், 20 நிலைய பணி யாளர்கள் இணையவழியாக கலந்து கொண்டனர்.

மேலும், 77 விவசாயிகள் கொண்ட குழுவினருக்கு நிகழ்ச்சியின் நேரலை ஒளிபரப்பு காண்பிக்கப்பட்டு, மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர், முனைவர் கி. சுரேஷ், மரம் வளர்ப்பின் முக்கியத்துவம் மற்றும் மத்திய வேளாண்மை அமைச்சர் வழங்கிய 50,000 மரக் கன்றுகள் நடும் இலக்கை அடைவதற்கான செய்தியை எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து மரக்கன்றுகள் நடப்பட்டு, எதிர்கால தலைமுறைக்காக நாட்டின் பசுமையை மேம்படுத்த உறுதிமொழி ஏற்கப்பட்டது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**14. சுரைக்காய் சூப்**



**தேவையான பொருட்கள்**

சுரைக்காய் — 2 கப்

பூண்டு — 2 பல்

மிளகு

சீரகம்

உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

சுரைக்காயை வேக வைத்து அரைத்து மசாலா சேர்த்து கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# வீரகனூர் பகுதியில் வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு



சேலம், ஆக.13

சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன், வீரகனூர் பகுதியில் உள்ள உரக்கடைகளில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, விவசாயிகளுக்குத் தடையின்றி உரம் விநியோகம் செய்யப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்து அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகளை வழங்கினார். தொடர்ந்து, வேளாண்மைத் துறை சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் நுண்ணீர் பாசனத் திட்டம், தமிழ்நாடு பசுமைப் போர்வை இயக்கத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட மகாகனி மரக்கன்றுகள் மற்றும் பசுந்தாள் உர விதை விநியோகத் திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்ட தக்கைப்பூண்டு வயல்களையும் அவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், வேளாண் விரிவாக்க மையத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், நடப்பு நிதியாண்டிற்குரிய திட்டப் பணிகளை விரைந்து முடிக்கவும், விவசாயிகளுக்கான அடையாள எண் (Farmer ID) பதிவை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன், வேளாண்மை அலுவலர் ஜானகி, துணை வேளாண்மை அலுவலர் மணவழகன், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் ஆத்மா திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# போலி பூச்சி கொல்லி மருந்துகளை பற்றிய விழிப்புணர்வு முகாம் மற்றும் ATMA திட்டத்தின் ஒருங்கிணைந்த ஊட்ட சத்து மேலாண்மை பயிற்சி முகாம்

திருச்சி, ஆக.13

கொட்டாம்பட்டி சுற்று வட்டார விவசாயிகளுக்கு, மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம் மற்றும் தமிழக வேளாண் துறையுடன் இணைந்து போலி பூச்சி கொல்லி மருந்துகளை பற்றிய விழிப்புணர்வு முகாம் கொட்டாம்பட்டி வட்டார உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு முகாமில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கு பெற்றனர். நிகழ்ச்சியின் தொடக்கமாக வளர்மதி, உதவி வேளாண்மை இயக்குனர் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி பயிர் பாதுகாப்பு அலுவலர், அமுதா, போலி பூச்சி கொல்லிகளை அடையாளம் காணும் முறைகள், பூச்சிகொல்லி களினால் ஏற்படும் தீமைகள், மாற்று முறைகள், பருத்தி பூச்சி நோய் மேலாண்மை பற்றி எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் அடுத்து பேராசிரியர் முனைவர் சி.சுப்பிரமணியன், லூாலு, மதுரை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை குறித்து எடுத்து கூறினார். அதன் தொடர்ச்சியாக பேராசிரியர் முனைவர் லு.சுரேஷ், லூாலு, மதுரை, பொதுவாக பயிர்களில் உள்ள பூச்சி மேலாண்மை பற்றி விளக்கம் அளித்தார். அடுத்து பேசிய அருள்மணி, உதவி தோட்டக்கலை இயக்குனர், மண் வள பாதுகாப்பு பற்றி எடுத்துரைத்தார். நிகழ்ச்சியின் நிறைவில் புவீனிபு திட்டத்தின் உதவியுடன் விவசாயிகளுக்கு இயற்கை இடுபொருட்கள் வழங்கப்பட்டது. மேலும் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி, பருத்தி விவசாயிகளுக்கு உயிரியல் கட்டுப்பட்டு காரணிகளான கிரைசோபா, ரெடுவிட் நாவாய் பூச்சி போன்ற ஊண் உண்ணிகள், ட்ரிக்கோகிரம்மா ஒட்டுண்ணிகள் மற்றும் உயிரியல் பூஞ்சண கொல்லிகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கே.ரகுராமன், Dy. AO மற்றும் ராஜதுரை, BTM செய்திருந்தனர். நிகழ்ச்சிக் கான தொழில்நுட்ப ஏற்பாடுகளை மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி அலுவலர்களான ராஜேஸ்வரி & நிசிந்தா, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் மற்றும் அபின், தொழில்நுட்ப அலுவலர் ஆகியோர் செய்திருந்தனர்.

# மலை காய்கறிப் பயிர்களுக்கான விதை கடினப்படுத்துதல் தொழில்நுட்பம் – ஒரு பார்வை

ஊட்டி, ஆக.13

நீலகிரி மாவட்டத்தில் தற்போது எல்–நினோ விளைவு காரணமாக தென்மேற்கு பருவமழை நிகர சராசரியை விட மிகவும் குறைவாக பெய்து வருவதால் இங்கு பயிரிடப்படும் காய்கறி பயிர்களுக்கு போதிய நீர் இல்லாமல் வறட்சினால் பயிர்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையிலிருந்து பயிர்களை பாதுகாக்க விதை கடினப்படுத்துதல் தொழில்நுட்பம் முக்கியமானதாகும்.




**விதை கடினப்படுத்துதல் தொழில்நுட்பம் :** விதை கடினப் படுத்துதல் என்பது விதைப்பதற்கு முன் விதைகளை குறிப்பிட்ட ரசாயனம் அல்லது தண்ணீரில் ஊரவைத்து, பின் நிழலில் உலர்த்தி அவற்றின் மூல ஈரப்பத நிலைக்கு கொண்டுவரும் ஒரு உத்தி ஆகும். இது வறட்சியை தாங்கி வளரவும், பயிர் முளைப்புத்திறனை அதிகரிக்கவும் உதவுகிறது. விதைகளை நீரில் அல்லது குறிப்பிட்ட ரசாயனத்தில் 8 முதல் 12 மணி நேரம் ஊற வைப்பதன் மூலம் விதையின் உடலியல் காரணிகள் தூண்டப்படுகிறது. மீண்டும் அந்த விதைகளை நிழலில் உலர்த்தி அவற்றின் பழைய ஈரப்பத நிலைக்கு கொண்டு வருவதால் விதை முளை விடுவது தடுக்கப்பட்டு விதை கடினப்படுத்தப்படுகிறது. இவ்வாறு கடினப்படுத்தப்பட்ட விதைகளை விதைப்பதன் மூலம் வறட்சியை தாங்கி ஒரே சீராகவும் வீரியமாகவும் அனைத்து விதைகளும் முளைப்பது உறுதி செய்யப்படுகிறது. விதை கடினப்படுத்துதல் மூன்று முறைகளில் மேற்கொள்ளப் படுகிறது.

**நீர் மூலம் விதை கடினப்படுத்தும் முறை :** இந்த முறையில் சுத்தமான தண்ணீரில் விதைகளை 8 முதல் 12 மணி நேரம் ஊற வைத்து, பின் நிழலில் உலர்த்தி அவற்றின் மூல ஈரப்பத நிலைக்கு கொண்டுவர வேண்டும். கேரட், பீட்ரூட், காலி ப்ளவர், முட்டைகோஸ், ப்ரொக்கோலி, நூல்கோல், டர்நீப் மற்றும் முள்ளங்கி ஆகிய விதைகளுக்கு இம்முறையில் விதை கடினப்படுத்துதல் மேற்கொள்ளலாம்.

**ரசாயன நீர் மூலம் விதை கடினப்படுத்தும் முறை :** இந்த முறையில் விதைகளை ரசாயனம் கலந்த நீரில் குறிப்பாக 1% $KNO_3$ அல்லது 1% KCL-ல் 12 மணி நேரம் ஊரவைத்து, பின் நிழலில் உலர்த்தி அவற்றின் மூல ஈரப்பத நிலைக்கு கொண்டுவர வேண்டும். குறிப்பாக பீன்ஸ் விதைகளுக்கு இம்முறையில் விதை கடினப்படுத்துதல் மேற்கொள்ளலாம் என கண்டறியப்பட்டுள்ளது.

**அங்கக முறையில் விதை கடினப்படுத்துதல் :** 2% ஜீவாமிர்தம் அல்லது பஞ்சக்காவியாவுடன் 6 மணி நேரம் விதைகளை ஊற வைத்து, பின் நிழலில் உலர்த்தி அவற்றின் மூல ஈரப்பத நிலைக்கு கொண்டு வர வேண்டும். இம்முறையில் கடினப்படுத்தப்படும் விதைகள் வறட்சியை தாங்கி முளைப்பதுடன், பயிர்களின் நோய் எதிர்ப்பு திறனும் தூண்டப்பட்டு சீராக முளைப்பது கண்டறியப்ப ணட்டுள்ளது.

மேலும், குறிப்பாக ஏற்கனவே ரசாயன முறையில் விதை நேர்த்தி செய்த விதைகளுக்கு அங்கக முறையில் விதை கடினப்படுத்துதல் மேற்கொள்ளாமல் இருப்பது சாலச்சிறந்தது என எஸ்.நவீன், வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், உதகை அறிவுறுத்தினார்.

# தோட்டக்கலை மாணவர்கள் உருவாக்கிய பனித்துளி அறை தொழில்நுட்பத்தின் செயல்பாட்டு மாதிரி செயல்விளக்கம்



தென்காசி, ஆக.13

தென்காசி மாவட்டம், நாரணாபுரத்தில், கலசலிங்கம் ஆராய்ச்சி மற்றும் கல்வி அகாடமியின் தோட்டக்கலை மாணவர்கள், தங்களது ஊரக தோட்டக்கலைப் பணியனுபவ (Rural Horticultural Work Experience - RHWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, மூடுபனி அறை (Mist Chamber) தொழில்நுட்பம் குறித்த செயல்விளக்கத்தை நடத்தினர்.

இதன் ஒரு பகுதியாக, பனித்துளி அறையின் அமைப்பு, முக்கியக் கூறுகள் மற்றும் செயல்படும் விதம் குறித்து நடைமுறைப் புரிதலை ஏற்படுத்தும் வகையில் மாணவர்கள் செயல்படும் மாதிரி (Working Model) ஒன்றை வடிவமைத்து உருவாக்கினர். இம்மாதிரியில் பாதுகாக்கப்பட்ட நாற்றுப் பெருக்க அறை, பனித்துளி தெளிப்பு அமைப்பு, நீர் வழங்கும் அமைப்பு மற்றும் தாவரக் குச்சிகளை கட்டுப்படுத்தப்பட்ட ஈரப்பதச் சூழலில் வளர்ப்பதற்கான நாற்றுப் பெருக்கத் தட்டுகள் ஆகியவை இடம் பெற்றிருந்தன.

செயல்விளக்கத்தின்போது, மூடுபனி தெளிப்பு அமைப்பின் செயல்பாட்டை மாணவர்கள் நேரடியாக விளக்கினர். நுண்ணிய நீர்த்துளிகள் அதிக சார்பு ஈரப்பதத்தை நிலைநிறுத்தி, தாவரக் குச்சிகளில் இருந்து நீர் இழப்பைக் குறைத்து, வேகமான மற்றும் சீரான வேர் உருவாக்கத்திற்கு ஏற்ற நுண்சூழலை உருவாக்குகின்றன என்பதை அவர்கள் விளக்கினர். வெவ்வேறு வேர் உருவாக்க நிலைகளில் இருந்த தாவரக் குச்சிகள் கொண்ட நாற்றுப் பெருக்கத் தட்டுகளும் காட்சிப்படுத்தப்பட்டு, தாவரங்களின் தாவர இனப்பெருக்கத்தில் (Vegetative Propagation) மூடுபனி அறை தொழில்நுட்பத்தின் நடைமுறைப் பயன்பாடு விளக்கப்பட்டது.

வணிக ரீதியான நாற்றங்கால் உற்பத்தி, தரமான நடவுப் பொருட்களைப் பெருக்குதல் மற்றும் பல்வேறு தோட்டக்கலைப் பயிர்களில் வெற்றிகரமான தாவர இனப்பெருக்கம் ஆகிய வற்றில் பனித்துளி அறைகளின் முக்கியத்துவத்தை இச்செயல் விளக்கம் எடுத்துரைத்தது. மாணவர்கள் உருவாக்கிய செயல் பாட்டு மாதிரி, பாதுகாக்கப்பட்ட தாவரப் பெருக்கத் தொழில் நுட்பத்தை நடைமுறை நிலையில் புரிந்துகொள்ளவும், செயல் படுத்தவும் சிறந்த கற்றல் அனுபவத்தை வழங்கியது.

இச்செயல்விளக்கத்தை எம்.அபர்ணா உன்னிதன், ரசக்னா கே., கார்த்திகா ஸ்ரீ எம். மற்றும் ஜி. அனிதா ஆகிய மாண வர்கள், பாடநெறி ஆசிரியர் முனைவர் எஸ்.விஜயகுமார் மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் வி.விஜய பிரபா ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் நடத்தினர்.

இந்நிகழ்விற்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் பி.ராஜா ஆதரவு வழங்கினார்.

# வீட்டுத் தோட்ட காய்கறி விதைகள் விற்பனைக்குள்ளன


திருச்சி, ஆக.13

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் பல்வேறு பயிற்சிகள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, ஆடி மாதத்தில் வீட்டுக் காய்கறி தோட்டம் அமைக்க ஏதுவாக முளைக்கீரை, கத்தரி, சுரைக்காய் மற்றும் பீர்க்கன் என நான்கு விதைகள் அடங்கிய வீட்டுத்தோட்ட காய்கறி விதை பாக்கெட் விற்பனைக்கு தயாராக உள்ளது.

ஒரு பாக்கெட்டின் விலை ரூ.30/- ஆகும். அது சமயம் தேவைப்படும் அனைவரும் அலுவலக வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தை நேரில் அணுகி பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 0431-2962854, 88381 26730, 63811 86765, 98432 18818.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# வேம்பு கசக்கும் அதனுடைய வருமானம் இனிக்கும் - எப்படி?



பனை, தென்னை மரத்திற்கு அடுத்த படியாக வேப்பம் மரம் (NEEM TREE) தன்னுடைய ஒவ்வொரு பொருளையும் காசாக மாறுவதால் கசப்பான வேப்பகொட்டை கூட ஏழை களின் வாழ்வாதாரத்திற்கு உதவுகின்றன. அதனால் அவர்கள் வாழ்க்கை இனிக்க செய்யும், அதுவும் இந்த சூப்பர் எல் – நினோ காலகட்டத்தில்.

அறவே விவசாய வேலை இல்லாத காலத்தில் வயதான எளிய மகளிர்களுக்கு வருமானம் தரக்கூடிய தொழிலாக வேப்பம் பழங்களை சேகரிப்பது தான்.

இன்றைய நவீன விவசாயத்தில் இயற்கை பூச்சிக் கொல்லி யாகவும் உரமாகவும் பயன்படுகிறது.

**வேப்பம் பழம் எப்போது சேகரிக்கலாம்?**

ஆண்டு தோறும் மே மாதத்தில் (சித்திரை, வைகாசி) வெயில் வேப்பம் பூக்கள் மரத்தில் அரும்பி, காயாகி பின் பழமாக மாறும், பின்னர் தானாகவே மரத்திலிருந்து உதிரும். அதிகாலை வேளை களில் வேப்ப கொட்டைகளை சேகரிக்க கூட்டமாக கூட்டமாக பெண்கள் மரத்தை சுற்றி வந்த கீழே உதிர்ந்த வேப்பம் பழங் களை சேகரித்து, அதனுடைய தோலை நீக்கி தண்ணீரில் நன்றாக கழுவி காயவைப்பார்கள். காய வைத்த வேப்பங்கொட்டைகளை உள்ளூரிலே வியாபாரிகள் தெரு தெருவாக சைக்கிளில் வந்து வாங்குவார்கள். இன்றைய கால கட்டத்தில ஒரு கிலோ வேப்பங்கொட்டை (வேப்ப முத்து) 65 முதல் 75 வரை விற்பனை செய்யப்படுகிறது. இது வயதான, விவசாய பெண்களுக்கு சிறு வாட்டு பணமாக உதவுகின்றன.

**வேம்பு நடுவது எப்படி?**

வேப்ப மரத்தின் அறிவியல் பெயர் AZADIRACHATA INDICA. இது அனைத்து மண்வகையிலும் வளரும், குறிப்பாக தரிசாக உள்ள நிலங்களில் மற்ற பயிர்கள் சாகுபடி செய்வதை விட வேம்பு

சாகுபடி செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 75-90 மரங்கள் வரை நடவு செய்யலாம். இடைவெளியாக, மரத்திற்கு மரம் 15 அடி இடைவெளியில் நடலாம். நட்ட 3-5 ஆண்டுகளில் காய்ப்புக்கு வரும். நல்ல மரத்தில் ஆண்டுக்கு 75 கிலோ முதல் 100 கிலோ வரை வேப்ப முத்து கிடைக்கும். எனவே விவசாயிகள் அருகே உள்ள வனத்துறை அலுவலகத்தில் இலவசமாகவே வேப்பங் கன்றுகளை வாங்கி நடவு செய்யலாம்.

**வேப்பங்கொட்டையின் பயன்கள்?**

வேப்பங்கொட்டையிலிருந்து வேப்ப எண்ணெய், வேப்பம் புண்ணாக்கு எடுக்கப்படுகிறது.

**வேப்ப எண்ணெய்**

இது இயற்கை விவசாயத்தில் பூச்சிகளை விரட்டியாக பயன் படுகிறது. அதுமட்டுமல்ல யூரியாவில் தழைசத்து உரம் (NITROGEN) வீணாகுவதை தடுக்க யூரியாவுடன் வேப்ப எண்ணெய் தடவி (NEEM COATED UREA)வாக விற்பனை செய்யப்படுகிறது. வேப்ப புண்ணாக்கு எல்லா பயிர்களுக்கும் (மக்காசோளம், பருத்தி) மண்ணில் உள்ள கூண்டு புழுக்கள் அழிக்க (படைப்புழு, தண்டுக் கூண் வண்டு) தடுக்க ஏக்கருக்கு 100 கிலோ இட பரிந்துரைக் கப்பட்டுள்ளது. வேப்பம் பூ - சங்க கால இலக்கியங்களில் பாட பெற்றது, பண்டைய வீரர்கள் வெற்றி பெற்று ஊருக்கு திரும்பும் போது வேப்பம் பூ மாலையணிந்து வருவதை விவரிக்கிறது. தமிழ் புத்தாண்டு தினத்தில் வேப்பம்பூ ரசம் வேப்பம் பூ பச்சடி வைத்து விரதம் விடுவார்கள். இது மருத்துவ குணமுள்ளது. வேப்ப இலை கால்நடைகளுக்கு ஆடுகளுக்கு தீவனமாக பயன்படுத்தபடுகிறது. அதுமட்டுமல்ல நெல் நடவிற்கு பசுந்தழை (GREEN LEAF MANURE) உரமாக பயன்படுத்தலாம்.

வேப்பம் மரம் - தச்சு சாமான்கள் (கட்டில் நிலை, ஜன்னல்) தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. இதுவும் ஒரு கற்பக விருட்மாக தான் விவசாயிகளால் பார்க்கப்படுகிறது. ஆன்மீக ரீதியாக இதனை அம்மனாக பாவித்து இந்த ஆடி மாதம் முழுவதுமாக வழி பாடு செய்து வருகின்றனர். வேப்பம் மரத்தின் தேவை ஆண்டுக்கு ஆண்டு அதிகமாக தான் தேவைபடுகிறது. தென்னை, கொய்யா, மா தோப்புகளை போல வேப்பந்தோப்புகளை உருவாக்கலாம்.

மரப்பயிரும் ஒரு பணப்பயிராக தான் உள்ளது என்பது மிகையல்ல.

வேம்பு வளர்ப்போம், விவசாயத்தை செழிப்பாக்குவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலக்கடலை பயிர்களை மாநில திட்ட துணை இயக்குநர் நீலாம்பாள் ஆய்வு!



சேலம், ஆக.13

சேலம் மாவட்டம் எடப்பாடி வட்டாரத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்று வரும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்ட (PMFBY) விழிப்புணர்வுப் பிரச்சார வாகனத்தை மாநில திட்ட துணை இயக்குநர் நீலாம்பாள், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து, எடப்பாடி சுற்றுவட்டாரப் பகுதிகளில் பருவமழை பெய்யாததால் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள நிலக் கடலை பயிர்களை நேரில் சென்று பார்வையிட்டு சேத விபரங்கள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார். இவ்ஆய்வின் போது, வேளாண்மை உதவி இயக்குநர், பூங்கொடி, உதவி வேளாண்மை அலுவலர் (AAO) சந்தோஷ் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

விவசாயிகளிடையே மாநில திட்ட துணை இயக்குநர் நீலாம்பாள் பேசியதாவது, ‘விவசாயிகள் இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் இழப்புகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள பயிர் காப்பீடு மிகவும் அவசியமான ஒன்றாகும். குறிப்பாக, நிலக்கடலை போன்ற மானாவாரி பயிர்களுக்கு வறட்சி மற்றும் பருவமழை மாறுபாடு களால் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்ய பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் ஒரு சிறந்த பாதுகாப்பு அரணாக திகழ்கிறது.

**வறட்சி மற்றும் இயற்கைச் சீற்ற இழப்பீடு :** விதைப்புத் தடை படுதல், வறட்சி, வெள்ளப்பெருக்கு, பூச்சித் தாக்குதல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய சேதங்கள் என அனைத்து நிலைகளிலும் ஏற்படும் இழப்புகளுக்கு இத்திட்டத்தின் கீழ் இழப்பீடு பெற முடியும்.

**தேவையான ஆவணங்கள் & பதிவு செய்யும் முறை :** விவசாயிகள் தங்கள் பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அல்லது பொது சேவை மையங்கள் (CSC) மூலமாக பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம். பதிவுக்கு சிட்டா, அடங்கல், வங்கி கணக்கு புத்தக நகல், ஆதார் கார்டு மற்றும் புகைப்படம் ஆகியவை அவசியமாகும்.

**இழப்பீடு கோரும் நடைமுறை (72 மணி நேர அவகாசம்) :** வறட்சி அல்லது இயற்கை சீற்றங்களால் பயிர்கள் பாதிக்கப்பட்டால், அது

குறித்து 72 மணி நேரத்திற்குள் வேளாண்மைத் துறைக்கோ, காப்பீட்டு நிறுவனத்திற்கோ அல்லது 'Crop Insurance' செயலி மூலமாகவோ உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும்.

நிலக்கடலை பயிருக்கு ஆகஸ்ட் 17 கடைசி நாள் என்பதால் விரைந்து பயிர் காப்பீட்டினை செய்து கொள்ளுமாறு எடுத்துரைத் தார். கடைசி நேர நெரிசலைத் தவிர்க்கவும், இணையதளச் சிக்கல் களை எதிர்கொள்ளாமல் இருக்கவும் அறிவிக்கப்பட்ட காலக் கெடுவுக்குள் விவசாயிகள் அனைவரும் நிலக்கடலை மற்றும் இதர பயிர்களுக்குக் காப்பீடு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.



# உயிர்ம விவசாயத்தில் உயிர் உரங்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடு



உயிர்ம விவசாயத்தில் உயிர் உரங்களின் முக்கியத்துவம் குறித்தும் அவற்றின் பயன்பாடு குறித்தும் திருச்சிராப்பள்ளி மாவட்ட விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் பா.நளினி, வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது :

**உயிர் உரங்கள்**

காற்றிலுள்ள தடைச்சத்தைக் கிரகித்துப் பயிருக்குக் கிடைக்கும் வகையில் மாற்றித் தரும் நுண்ணுயிரிகள் மற்றும் மண்ணில் உள்ள கரையாத மணிச்சத்து, சாம்பல் சத்து மற்றும் துத்தநாகச் சத்தை கரைத்துப் பயிருக்கு அளிக்கும் நுண்ணுயிரிகள் தான் 'உயிர் உரங்கள்' எனப்படுகிறது.

**அசோஸ்பைரில்லம்**

அசோஸ்பைரில்லம் என்பது வளிமண்டலத்திலுள்ள தழைச் சத்தினை மண்ணில் நிலை பெறச் செய்யும் ஒருவகை பாக்டீரியம் ஆகும். இது பயிர்களின் வேர்ப்பகுதியில் வாழ்ந்து காற்றில் உள்ள தழைச்சத்தை உறிஞ்சி நேரடியாகப் பயிர் களுக்கு வழங்குகிறது. மேலும், பயிர் வளர்ச்சி ஊக்கிகளான இன்டோல் அசிடிக் அமிலம் ஜிப்ரல்லின், சைட்டோகைனின் போன்ற வேதிப் பொருட்களை உற்பத்தி செய்வதால் பயிரின் வளர்ச்சி நன்கு ஊக்குவிக்கப் படுகின்றது. வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கப்பெறும் அசோஸ்பைரில்லம் – நெல் – நெற் பயிருக்கும் அசோஸ் பைரில்லம்–இதரம் சோளம், கம்பு, ராகி, மக்காச்சோளம், தினை, சாமை, எள், பருத்தி போன்ற பயிர்களுக்கும் ஏற்றதாகும்.

**ரைசோபியம்**

இது பயறுவகைச் செடிகளின் வேர்களில் வேர்முடிச்சுகளை உருவாக்கி காற்றில் உள்ள தழைச்சத்தை நிலை நிறுத்துகிறது. இவை உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை போன்ற அனைத்து பயறுவகைப் பயிர்களுக்கும் ஏற்றது.

**பாஸ்போபாக்டீரியா**

இவை தன் செல்களில் இருந்து சுரக்கும் ஃபார்மிக், அசிடிக், புரோபியோனிக், லாக்டிக், கிளைகாலிக், ஃபியூரிக் மற்றும் சக்சீனிக் போன்ற அங்கக அமிலங்கள் மூலமாக கரையாமல் இருக்கும் மணிச்சத்தைக் கரைத்து பயிர்கள் எடுத்துக் கொள்ளும் நிலைக்கு மாற்றிக் கொடுக்கின்றன. பாஸ்போபாக்டீரியா அனைத்து பயிர் களுக்கும் அனைத்து பருவத்திற்கும் ஏற்ற உயிர் உரமாகும்.

**அசோபாஸ்**

இது அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா ஆகிய இரண்டு முக்கிய நுண்ணுயிரிகளையும் ஒரே கலவையாக கொண்ட கூட்டு உரமாகும். இதன் மூலம் பயிருக்குத் தழைச்சத்தும், மணிச்சத்தும் ஒரு சேர கிடைக்கிறது. அசோபாஸ் தானியப் பயிர்கள், சிறுதானியப் பயிர்கள், நெல் தரிசுப் பயிர்களுக்கு ஏற்ற உயிர் உரமாகும்.

**துத்தநாகசத்து தரும் பாக்டீரியா**

துவாரத்தின் வேர்சூழ் மண்டலத்தில் வாழக்கூடிய பயிரின் வளர்ச்சியினை ஊக்கிவிக்கக்கூடிய பல நுண்ணுயிர்கள் மண்ணில் கரையாத நிலையில் உள்ள துத்தநாதச் சத்தை கரைத்து அளிக்கும். மேலும் இவை அமினோ அமிலங்கள் மற்றும் தாவர வளர்ச்சி ஊக்கிகள் ஆகியவற்றைச் சுரந்து பயிரின் வளர்ச்சியை துரிதப் படுத்துகிறது. இந்த பாக்டீரியாவை குறிப்பாக நெல் பயிருக்கு பயன்படுத்தலாம்.

**பொட்டாஷ் சத்து தரும் பாக்டீரியா**

மண்ணில் சாம்பல் சத்துபாறைத் தாதுக்களுடன் பிணைந்து செடிகளால் உறிஞ்ச முடியாதபடி இருக்கும். பொட்டாஷ் சத்து தரும் பாக்டீரியாக அந்த பிணைப்பை உடைத்து சாம்பல் சத்தை எளிதாக வேர்கள் உறிஞ்சும் நிலைக்கு நகர்த்துகிறது. இவை அனைத்து பயிர்களுக்கும் ஏற்ற உயிர் உரமாகும்.

**பயன்கள்**

● ஓர் எக்டரில் 15 முதல் 30 கிலோ வரை காற்றிலுள்ள தழைச்சத்தைக் கிரகித்து மண்ணில் நிலைநிறுத்துகிறது.

● உயிர் உரங்களை இடுவதினால் பரிந்துரைக்கப்பட்ட இரசாயன உரங்களின் அளவில் 25 சதவிகிதத்தைக் குறைத்து இடலாம்.

● உயிர் உரங்களை இடுவதினால் அனைத்துப் பயிர்களிலும் 15 முதல் 30 சதவிகிதம் கூடுதல் விளைச்சல் கிடைக்கும்.

● மண்ணின் வளம் அதிகரிக்கப்பட்டு மண்ணின் தன்மை கெடாமல் பாதுகாக்கிறது.

● மண்ணின் ஈரப்பதத்தைக் காத்து வறட்சியிலிருந்து பயிரை பாதுகாக்கிறது.

● வேர்களின் வளர்ச்சியும், தூர்களின் எண்ணிக்கையும் இதனால் அதிகரிக்கிறது.

● இது வளர்ச்சி ஊக்கிகளை சுரப்பதினால் பயிர்களின் வளர்ச்சி அதிகரிக்கிறது.

● வேர்களும், திசுக்களும் வளம் பெற்று கதிர்களில் மணிகள் செழித்து வளர உதவும்.

**நுண்ணுயிர் உரங்களை இடும் வழிமுறைகள்**

● விதையுடன் கலந்து விதை நேர்த்திச் செய்தல்.

● நாற்றுகளை நுண்ணுயிர் உரக்கரைசலில் நனைத்து நடுதல்.

● மண்ணில் இடுதல்.

**விதையுடன் கலந்து விதைநேர்த்திச் செய்தல்**

ஓர் எக்டருக்குத் தேவையான 1 கிலோ திட (அ) 125 மி.லி. திரவ நுண்ணுயிர் உரத்தை அரிசிக் கஞ்சியுடன் கலந்து கூழ் போன்ற கரைசலாக்கி கொள்ள வேண்டும். இந்தக் கரைசலை நன்கு சுத்தப்படுத்தப்பட்ட விதையுள்ள பாத்திரத்தில் சிறிது சிறிதாக ஊற்றி நான்றாக கிளற வேண்டும். இதனால் ஒவ்வொரு விதையிலும் நுண்ணுயிர் கலவை நன்கு ஒட்டிக் கொள்ள ஏதுவாகும். இப்பொழுது பார்ப்பதற்கு ஒரு மேல் பூச்சு போன்ற அமைப்பு ஒவ்வொரு விதையிலும் தெரியும். பின்னர் விதைகளை சாக்கின் மீது நன்கு பரப்பி நிழலில் சுமார் 30 நிமிடங்கள் உலர்த்த வேண்டும். இவ்வாறு உலர்த்தப்பட்ட விதை களை உடனடியாக விதைக்கலாம்.

**நாற்றுக்களை நுண்ணுயிர் உரக்கரைசலில் நனைத்து நடுதல்**

இம்முறையில் நாற்றுகளை பிடுங்கி நடவு வயலில் நடுவதற்கு முன்பு நாற்றின் வேர்ப்பகுதியை மட்டும் நுண்ணுயிர் உரக் கரைசலில் நனைத்து பின்பு நடலாம். ஒரு எக்டருக்குத் தேவையான கரைசலைத் தயார் செய்ய 1 கிலோ திட (அ) 125 மி.லி. திரவ நுண்ணுயிர் உரத்தை 40 லிட்டர் நீரில் கலந்து கரைசலாக்கி கொள்ள வேண்டும். இக்கரைசலில் நாற்றுகளின் வேர்களைச் சுமார் 30 நிமிடங்கள் நனையும்படி வைத்திருந்து பிறகு நடவு செய்ய வேண்டும். இதனால் நுண்ணுயிரிகள் அதிக எண்ணிக்கையில் வேர்களில் ஏற்றம் பெறும்.

**மண்ணில் இடுதல்**

ஓர் எக்டருக்குத் தேவையான 2 கிலோ திட (அ) 500 மி.லி. திரவ நுண்ணுயிர் உரத்தை 25 கிலோ மண் மற்றும் 25 கிலோ நன்கு மக்கியத் தொழுஉரத்துடன் கலந்து ஒரே சீராக தூவ வேண்டும். இவ்வாறு நிலத்தில் நேரடியாக இடுவதால் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கை மிகுதியாகி பயிர்களுக்கு அதிக அளவில் சத்துக்கள் கிடைக்கும்.

**உயிர் உரங்களைப் பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டியவை**

● பயிர்களுக்குஉகந்தஉயிர் உரங்களை பயன்படுத்தலாம்.

● நுண்ணுயிர் உரப் பாக்கெட்டுகளை, உலர்ந்த, குளிர்ச்சியான இடங்களில் சேமித்து வைக்க வேண்டும்.

● நுண்ணுயிர் உரங்களை பூச்சிக்கொல்லி, பூஞ்சாணக்கொல்லி மற்றும் களைக் கொல்லிகளுடன் கலந்து இடக்கூடாது.

● விதையுடன் கலக்கும் பூஞ்சாணக் கொல்லிகளைப் பயன் படுத்தும் பொழுது, நுண்ணுயிர் உரங்களைக் கடைசியாகக் கலக்க வேண்டும்.

● நுண்ணுயிர் உரங்களைஅதிகாலை நேரத்தில் பயன்படுத்த வேண்டும்.

● நுண்ணுயிர் உரங்கள் விதைகளுடன் ஒட்டிக் கொள்ளுவதற்கு அரிசிக் கஞ்சியைப் பயன்படுத்த வேண்டும்.

● இரசாயன உரங்களுடன், நுண்ணுயிர் உரங்களைக் கலந்து இடக்கூடாது.

● நிலத்தில் இடும் நுண்ணுயிர் உரங்கள் நன்கு செயல்படுவதற்கு நிலத்தில் தொழுஉரங்கள் மற்றும் அங்ககப் பொருட்களை அதிகம் இட வேண்டும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



Rithvik Pipe

IS 4985 : 2021 CML-

IS 9537 CML-

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# விதைகளை பரிசோதிக்க விவசாயிகளுக்கு அழைப்பு!

திருவண்ணாமலை, ஆக.13

ஆடி மாதம் தொடங்கி இருப்பதால் சில இடங்களில் மிதமாகவும் மற்றும் சில இடங்களில் அதிக அளவில் மழை பெய்து கொண்டு இருப்பதால் 'ஆடி பட்டம் தேடி விதை' என்ற பழமொழி ஏற்ப விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகள் விதைப்பிற்கு முன் விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம். விதைகளை பரிசோதனை செய்வதன் மூலம் இடுபொருட்கள் செலவினை குறைத்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். குறைந்த செலவில் அதிக மகசூல் பெற விதைபரிசோதனை செய்தபின் விதைகளை பயன்படுத்துவதன் மூலம் விதைகளின் முளைப்புதிறன் குறைபாடு இல்லாமல் இருப்பதையும் விதைகளில் பிற இரக விதைகள் உள்ளதா என்பதை அறிவதன் மூலம் கலப்பு விதைகள் பயன்படுத்துவதை தவிர்க்கலாம். மேலும் விதையின் ஈரப்பதம் மற்றும் சுத்தத்தன்மை ஆகியவற்றை அறிந்து பயன்படுத்துவதன் மூலம் பயன்படுத்தும் விதைகள் முளைக்க தரமானதா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் விவசாய பெருமக்கள் தங்களிடம் உள்ள விதைகளை அனுப்பி அவற்றின் ஈரப்பதம், பிற இரக கலவன், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்குதல் ஆகியவற்றை பரிசோதனை செய்து அதன்பின்பு விதைப்பு செய்து அதிக மகசூல் பெற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொள்ளளப்படுகின்றது.

விதை மாதிரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். விதைகளை அனுப்பும் போது பயிரின் பெயர், இரகம் மற்றும் குவியல் எண் ஆகியவை குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்துடன் ஒரு மாதிரிக்கு ரூபாய் 80/- வீதம் விதைப்பரிசோதனைக் கட்டணம் சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

விதை மாதிரிகளை மூத்த வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், டாங்காப் கட்டிடம், வேங்கிக்கால், திருவண்ணாமலை 606 604 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

# உழவர் திரள் பரவலாக்கம் நிகழ்ச்சி!



புதுக்கோட்டை, ஆக.13

புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்க திட்டங்களின் உறு துணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 2026-2027-ம் ஆண்டிற்கு குளத்துர் வருவாய் கிராமத்தில் உழவர் திரள் பரவலாக்கம் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. முன்னதாக வேளாண்மை உதவி இயக்குநர் முத்துசாமி, அனைவரையும் வரவேற்று பேசினார். வேளாண்மை இணை இயக்குநர் சுந்தர மகாலிங்கம், இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்து கூறினார். வேளாண் பயிர் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்களான உழவின் போது வேப்ப புண்ணாக்கு, தொழு உரம் இடுதலின் முக்கியத்துவம், விதைநேர்த்தி செய்வதன் முக்கியத்துவம், நுண்ணீர் பாசனம் திட்டத்தில் பயன்பெறும் உத்திகள் பற்றியும் விரிவாக விசாயிகளுக்கு எடுத்து கூறினார். வேளாண்மை துணை இயக்குநர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சண்முக ஜெயந்தி, பி.எம் கிசான் திட்டத்தின் பயனடையும் முறைகள் பற்றியும் விவசாயிகள் தங்களின் நில உடைமைகளை ஆதாக்ஷி எண்ணுடன் இணைத்து பயன் பெறுமாறு விவசாயிகளிடம் எடுத்து கூறினார். ஆர்.வி.எஸ் வேளாண்மை கல்லுரி உதவி பேராசிரியர் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றியும், உழவு செய்தல், களை எடுத்தல், நீர் பாசனம் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்து கூறினார்.

ஆர்.வி.எஸ் வேளாண்மை கல்லுரி உதவி பேராசிரியர் சேகர் வேளாண் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் பற்றி விவாசாயிகளுக்கு விரிவாக எடுத்து கூறினார். மீன்வள ஆய்வாளர் சரவணன் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். மீன்வளத்துறையில் குன்றாண்டார்கோவில் தோட்டக்கலை உதவி இயக்குநர் ஸ்ரீமதி, தோட்டக்கலைதுறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறினார். குன்றாண்டார்கோவில் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மேற்பார்வையாளர் வீரம்மாள், விவசாயிகள் தங்களின் விளைபொருட்களை நல்ல விலையில் விற்பனை செய்

வதற்கான வழிமுறைகளையும், ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விவசாயிகள் அவர்களின் விளைபொருட்களை வைத்து பொருள் ஈட்டு கடன் பெற்று கொள்ளலாம்.

இப்பயிற்சியில் குன்றாண்டார்கோவில் வட்டாரத்தை சார்ந்த 100 விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியின் இறுதியில் துணை வேளாண்மை அலுவலர் ரவி நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஆனந்த ஜோதி, உதவி தொழில்நுட்ப மேலாளர் சுப்ரமணி மற்றும் வெற்றிச் செல்வி செய்திருந்தார் என வேளாண்மை உதவி இயக்குநர் முத்துசாமி தமது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.



# விவசாயிகளுக்கு மானிய விலையில் மக்காச்சோளம் விதைகள் விநியோகம்

## வேளாண் அதிகாரி தகவல்

அரியலூர், ஆக.13

அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டாரத்தில் விவசாயிகளுக்கு மக்காச்சோளம் விதைகள் மானிய விலையில் வழங்கப்படும் என வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தேசிய உணவு பாதுகாப்பு, ஊட்டச்சத்து இயக்கம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மக்காச்சோளம் செயல் விளக்கத்திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.11500 மதிப்புள்ள உயர் விளைச்சல் ரக மக்காச்சோள விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவை, மக்காச் சோள பயிர் வளர்ச்சி ஊக்கி மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் ஆகிய இடுபொருட்கள் அடங்கிய தொகுப்பு மானிய விலையில் வழங்கப்பட உள்ளது. மேலும் உயர் விளைச்சல் ரக மக்காச்சோள விதைகள் ஒரு குவிண்டாலுக்கு ரூ.10000/- மானியத்தில் விநியோகம் செய்யப்படுகிறது.

எனவே திருமானூர் வட்டார விவசாயிகள் இத்திட்டத்தில் பயன்பெற உரிய நில ஆவணங்களுடன் கீழப்பழூர் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தினை அணுகி பதிவு செய்து பயன் பெறலாம் என திருமானூர் வேளாண்மை உதவி இயக்குநர் பரமசிவம் தெரிவித்துள்ளார்

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# அங்கக வேளாண்மை முறையில் ஊட்டச்சத்து தோட்டம் அமைத்தல் தொழில் நுட்ப பயிற்சி


புதுக்கோட்டை, ஆக.13

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அங்கக வேளாண்மை முறையில் ஊட்டச்சத்து தோட்டம் அமைத்தல் தொழில் நுட்பங்கள் பற்றிய நிலைய பயிற்சி 13.08.26 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியானது வேளாண் அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம.தமிழ்ச்செல்வன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டது. ரேவதி, குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் (கந்தர்வகோட்டை) சிறப்புரையாற்றினார். முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா, நிலைய தொழில்நுட்ப வல்லுநர் (உணவியல் மற்றும் ஊட்டச்சத்தியல்) மகளிர் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் பற்றி விளக்கினார்.

முனைவர் வ.பா.ராகவேந்திரன், தொழில் நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்) அங்கன்வாடி மையங்களில் அங்கக வேளாண்மை முறையில் ஊட்டச்சத்து தோட்டம் அமைத்தல் மற்றும் தளிர் கீரைகள் வளர்ப்புத் தொழில் நுட்பங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் 40 அங்கன்வாடி பணியாளர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தின் 13 வட்டாரங்களிலிருந்து கலந்து கொண்டனர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உயர் ரக காய்கறி விதைகள் வழங்கப்பட்டது. இப்பயிற்சியினை தொழில் நுட்ப உதவியாளர்கள் அமுல்ராஜ் மற்றும் தினகரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**